
**ஜூன் – 21**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநில சுகாதாரத் துறையானது, அரசு மருத்துவமனைகளில் சிறுநீரகச் செயலிழப்பு சிகிச்சை பெறும் (டயாலிசிஸ்) நோயாளிகளுக்கு பால், முட்டை மற்றும் கொண்டைக் கடலை உள்ளிட்டப் புரதச் சத்து நிறைந்த உணவை வழங்குவதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தியக் கடலோர காவல்படைக்காக வேண்டி (ICG) கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (GSL) நிறுவனம் கட்டமைக்கும் எட்டு விரைவு ரோந்துக் கப்பல்களின் ஒரு வரிசையில் (FPV) ஒன்றான 'ஆச்சல்' என்னும் ஐந்தாவது விரைவு ரோந்துக் கப்பலானது (FPV) சமீபத்தில் அறிமுகப் படுத்தபட்டது.
- ஆயுஷ் அமைச்சகமானது, புது டெல்லியில் 'யோகா கனெக்ட்' என்ற உலகளாவிய உச்சி மாநாட்டை "Yoga for One Earth, One Health" என்ற கருத்துருவில் நடத்தியது .
- இஸ்ரேலிய-அமெரிக்க இராணுவத் தாக்குதல்கள் தொடர்ந்து நிகழும் என்ற அச்சத்தில் ஈரானில் இருந்து இந்தியக் குடிமக்களை வெளியேற்றுவதற்காக இந்தியா 'ஆபரேஷன் சிந்து' எனும் நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்த எண்ணிமக் கட்டணச் செயல்திறனுக்கான வெற்றியாளர்களில் ஒன்றாக சிட்டி யூனியன் வங்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் மிகவும் பிரபல சமையல் கலை விருதுகளில் ஒன்றான ஜேம்ஸ் பியர்ட் விருதுகள் விழாவில், 'செம' உணவகத்தின் சமையல் கலை வல்லுநரான விஜய் குமாருக்கு நியூயார்க் மாகாணத்தின் சிறந்த சமையல் கலை வல்லுநர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- சர்வதேசச் சுற்றுலாத் தினமானது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 18 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி 2025




- இந்த ஆண்டு ஆறாவது முறையாக நமது மாநிலத்தில் காற்றாலை மின் உற்பத்தி 100 மில்லியன் அலகு (Mu) குறியீட்டை (113.09) தாண்டியது.

- 2024 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று அதிகபட்ச தினசரி உற்பத்தி 111.174 Mu ஆக பதிவு செய்யப்பட்டது.
- தமிழ்நாடு மாநிலமானது, 11,361 MW என்ற ஒரு அளவிலான நிறுவப்பட்ட காற்றாலை மின்சார உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது மற்றும் ஆண்டுதோறும் சுமார் 13,000 Mu மின்சாரத்தினை உற்பத்தி செய்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா மற்றும் G7 உச்சி மாநாடு 2025





- கனடாவின் கனனாஸ்கிஸ் எனுமிடத்தில் நடைபெற்ற G7 உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்றார்.
- 'ஆற்றல் பாதுகாப்பு: மாறி வரும் உலகில் அணுகல் மற்றும் மலிவு விலையை உறுதி செய்வதற்கான பல்வகைப் படுத்துதல், தொழில்நுட்பம் மற்றும் உள்கட்டமைப்பு' என்ற அமர்வில் அவர் உரையாற்றினார்.
- 2023 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக புதிய உயர் ஆணையர்களை நியமிக்க இந்தியாவும் கனடாவும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இதனுடன் சைப்ரஸ், கனடா மற்றும் குரோஷியா ஆகிய மூன்று நாடுகளுக்கு நான்கு நாட்கள் அளவிலான சுற்றுப் பயணத்தையும் பிரதமர் மேற்கொண்டார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## SPArc சிகிச்சை

- ஒரு நோயாளியின் அடினாய்டு சிஸ்டிக் கார்சினோமா (ACC) சிகிச்சைக்கு அமெரிக்கா மிகவும் முதன்முறையாக படிநிலையிலான பாதிப்பிட ஆய்வு மற்றும் ஒரு நெகிழ்வான புரோட்டான் கற்றை உட்செலுத்து சிகிச்சை (step-and-shoot spot-scanning proton arc therapy-SPArc) என்ற நுட்பத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளது.
- சுற்றியுள்ளத் திசுக்களைச் சேதமாக்காத வகையில், புரோட்டான் கற்றைகள் மூலம் கட்டிகளை குறி வைப்பதன் மூலம் SPArc நுட்பம் செயல்படுகிறது.

- ACC என்பது பொதுவாகவே உமிழ்நீர்ச் சுரப்பிகள் அல்லது தலை மற்றும் கழுத்தின் பிற பகுதிகளில் உருவாகின்ற ஒரு அரிதான புற்றுநோயாகும்.
- ஆனால் இந்தத் தொழில்நுட்பங்கள் மிகவும் விலை உயர்ந்தவை என்பதால் ஒரு சிறிய எண்ணிக்கையிலான நோயாளிகளுக்கு மட்டுமே இது பொருந்தும்.




## வெப்ப அடிப்படையிலான புற்றுநோய்ச் சிகிச்சை





- இந்திய ஆராய்ச்சியாளர்கள் நுண்ணிய அளவிலான துகள்களை ஒரு தனித்துவமானக் கோப்பை போன்ற வடிவத்துடன் ஒருங்கிணைப்பதற்காக என்று புதுமையான ஒரு படி நிலை முறையை உருவாக்கியுள்ளனர்.

- இந்த நுட்பம் ஆனது, மிகப் பொதுவாக நுண் கோப்பைகள் என்று அழைக்கப்படுகின்ற PEGylated என்ற பகுதியளவு கவசமுடைய நுண் துகள்களை உருவாக்குவதை மிகவும் எளிதாக்குகிறது.
- வெப்ப அடிப்படையிலான ஒரு சிகிச்சை மூலம் புற்றுநோய் செல்களை எரிக்க இதைப் பயன்படுத்தலாம்.

## சாதாரண பருப்பொருளைக் கண்டறிதல்

- முதன்முறையாக, விரைவு ரேடியோ அலை உமிழ்வு (Fast Radio Bursts-FRB) எனப்படும் ஆற்றல் வாய்ந்த சில அண்ட சமிக்ஞைகளைப் பயன்படுத்தி பேரண்டத்தின் இதுவரை தவற விட்ட சாதாரணப் பருப்பொருளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- இது வரை, பேரண்டத்தின் சாதாரண அல்லது பேரியோனிக் பொருளில் குறைந்தது பாதி கணக்கிடப்படவில்லை என்பதை அறிவியலாளர்கள் அறிவர்.
- கரும்பொருள் மற்றும் இருண்ட ஆற்றல் என்பது பேரண்டத்தின் மிகப் பெரும்பகுதியை நிரப்பி உள்ளன.
- ஆனால் பேரண்டத்தின் மீதமுள்ள பகுதியானது அண்ட பேரியான்கள் அல்லது மிகவும் சாதாரணப் பருப்பொருளால் ஆனது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இரண்டு புதிய மண்புழு இனங்கள்

- காஞ்சூரியா திரிபுராயென்சிஸ் மற்றும் காஞ்சூரியா பிரியசங்கரி ஆகிய இரண்டு புதிய மண்புழு இனங்கள் ஆனது திரிபுராவில் கண்டறியப் பட்டுள்ளன.
- வடகிழக்கு இந்தியாவில் மட்டுமே காணப்படும் காஞ்சூரியா இனத்தில், இந்தப் புதிய சேர்க்கைகளுடன் தற்போது 10 இனங்கள் உள்ளன.
- இது திரிபுராவில் பதிவு செய்யப்பட்ட மெகாட்ரைல் வகை புழு இனங்களின் மொத்த எண்ணிக்கையை 38 ஆக அதிகரிக்கிறது.

- மண்புழு வகைப்பாட்டில் பிரியாசங்கர் சௌத்ரியின் வாழ்நாள் பணிக்காக வேண்டி காஞ்சூரியா பிரியசங்கரி என்று இதற்கு பெயரிடப்பட்டது.




### ஆரவல்லி மலையில் போர்துலாகா பாரத்




- இராஜஸ்தானின் ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள ஆரவல்லி மலைத்தொடரின் ஒரு பாறை பாங்கான மற்றும் பகுதியளவு வறண்ட நிலப்பரப்பில் போர்துலாகா பாரத் என்ற புதிய பூக்கும் வகை தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- தற்போது, இது IUCN வகைப்பாட்டின் கீழ் போதியத் தரவுகள் இல்லாத இனமாக வகைப் படுத்தப் படுள்ளது.
- போர்துலாகா பாரத் என்பது போர்துலாகா இனத்தைச் சேர்ந்தது.
- இந்தப் போர்துலாகா பேரினமானது நான்கு உள்ளூர் இனங்கள் உட்பட இந்தியாவில் 11 அறியப் பட்ட இனங்களுடன், உலகளவில் சுமார் 153 இனங்களைக் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2026

- உலகளவில், அமெரிக்காவின் மாசாசசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (MIT) ஆனது இந்த ஆண்டும் 14வது முறையாக 'உலகின் சிறந்த ஒரு கல்வி நிறுவனம்' என்ற

இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

- இந்த ஆண்டு தர வரிசையில், 12 இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனங்கள் (IIT) உட்பட மொத்தம் 54 பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன.
- எட்டு பல்கலைக்கழகங்கள் புதிதாக இடம் பெற்றுள்ளன.
- இந்தியா தற்போது இந்தத் தரவரிசையில் அதிகப் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்ற நான்காவது நாடாக உள்ளது.
- அமெரிக்கா (192), ஐக்கியப் பேரரசு (90), மற்றும் சீனா (72) ஆகியவை மட்டுமே இந்தத் தர வரிசையில் இந்தியாவை விடவும் மிகவும் அதிக எண்ணிக்கையிலான பல்கலைக் கழகங்களைக் கொண்டுள்ளன.
- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (123) மற்றும் மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (129) ஆகியவற்றிற்குப் பிறகு இந்தியாவில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (180) மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

**The best 10 universities in the world**

| | 2026 RANK | 2025 RANK | LOCATION |
|---|---|---|---|
| Massachusetts Institute of Technology (MIT) | 1 | 1 | United States |
| Imperial College London | 2 | 2 | United Kingdom |
| Stanford University | 3 | 6 | United States |
| University of Oxford | 4 | 3 | United Kingdom |
| Harvard University | 5 | 4 | United States |

# மாநிலச் செய்திகள்

## கன்ஹா புலிகள் வளங்காப்பகம் 2025

| Species | Groups Detected | Encounter rate (SE) | Detection probability (SE) | Mean group size (SE) | Group density (SE) | Individual density (SE) |
|---|---|---|---|---|---|---|
| Barking Deer | 207 | 0.173 (0.012) | 0.29 (0.02) | 1.18 (0.03) | 3.15 (0.28) | 3.75 (0.33) |
| Chital | 421 | 0.3 (0.018) | 0.29 (0.01) | 9.29 (0.45) | 3.52 (0.26) | 40.29 (1.85) |
| Gaur | 134 | 0.074 (0.008) | 0.36 (0.03) | 4.94 (0.51) | 0.95 (0.13) | 6.42 (0.58) |
| Sambar | 284 | 0.183 (0.013) | 0.36 (0.02) | 2.81 (0.11) | 2.56 (0.23) | 8.21 (0.54) |
| Wild pig | 161 | 0.134 (0.01) | 0.29 (0.02) | 6.07 (0.34) | 1.9 (0.2) | 11.19 (0.88) |

- உத்தரகாண்டின் டேஹ்ராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது, "இந்தியாவின் புலிகள் வாழ்விடங்களில் உள்ள குளம்பு கால் கொண்ட இனங்களின் நிலை" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள கன்ஹா புலிகள் வளங்காப்பகம் (KTR) ஆனது, அங்கிலேட்டுகளின் அல்லது குளம்புக் கால்கள் கொண்ட தாவரம் உண்ணும் இனங்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியாவின் பெரும் முன்னணிப் புலி வாழ்விடமாக உருவெடுத்துள்ளது.
- இந்த ஒரு அறிக்கையின்படி, "கன்ஹா புலிகள் வளங்காப்பகம் ஆனது இந்தியாவின் முக்கியப் புலிகள் வளங்காப்பகங்களில் அதிக அங்கிலேட்டுகளின் எண்ணிக்கையை (1,02,485) கொண்டுள்ளது."
- மொத்த உயிரினங்களின் நிறையானது 12.6 மில்லியன் கிலோகிராம்களைத் தாண்டி உள்ளது என்பதோடு இது கன்ஹா வளங்காப்பகத்தினை நாட்டின் மிகவும் இரை வளம் நிறைந்த புலி வாழ்விடமாக மாற்றுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பான் பருவநிலை மாற்ற மாநாடு 2025

- ஐக்கிய நாடுகளின் பருவ நிலையின் மாற்றம் தொடர்பான கட்டமைப்பு மீதான ஒரு உடன்படிக்கையின் (UNFCCC) ஜூன் பருவநிலைக் கூட்டங்கள் ஆனது ஜெர்மனியின் பான் எனுமிடத்தில் நடைபெற்றது.
- இது துணை அமைப்புகளின் 62வது கூட்டம் (SB 62) என்றும் அழைக்கப்படுகிறது.
- UNFCCC கட்டமைப்பில் இரண்டு நிரந்தரத் துணை அமைப்புகள் உள்ளன,
    - அமலாக்கத்திற்கான துணை அமைப்பு (SBI) மற்றும்
    - அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைக்கான துணை அமைப்பு (SBSTA).
- UNFCCC என்பது 1992 ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்ட பருவநிலை குறித்தப் பேச்சு வார்த்தைகளுக்கான ஓர் அடிப்படையை வழங்கிய ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.




# முக்கிய தினங்கள்


## மதி இறுக்க நோய் நினைவு தினம் 2025 - ஜூன் 18

- இந்தத் தினமானது, மதியிறுக்க நோய்ப் பாதிப்பு கொண்டுள்ள (ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம்) தனிநபர்களின் மிகவும் தனித்துவமான அடையாளங்கள், பலங்கள் மற்றும் பல்வேறு கண்ணோட்டங்களை எடுத்துரைக்கிறது.
- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (ASD) என்பது தகவல் தொடர்பு, சமூகத் தொடர்புகள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர் இந்தத் தகவல்களை எவ்வாறு செயலாக்குகிறார்கள் என்பதைப் பாதிக்கும் ஒரு வளர்ச்சி நிலை குறைபாடாகும்.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Unapologetically Autistic" என்பதாகும்.




## நிலையான அறுசுவை உணவியல் தினம் 2025 - ஜூன் 18





- இத்தினமானது நமது உலகின் இயற்கை மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மையுடன் இணைக்கப்பட்ட ஒரு முக்கியமான கலாச்சார வெளிப்பாடாக அறுசுவை உணவியல் துறையை அங்கீகரிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, சுமார் 56 நகரங்கள் அறுசுவை உணவியல் துறையின் பெரும் படைப்பாக்க நகரங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்ற ஒரு நிலைமையில் இவை ஒவ்வொன்றும் உள்ளூர் உணவுப் பாரம்பரியம் மற்றும் நிலைத் தன்மையை ஊக்குவிக்கின்றன.
- ஐதராபாத் நகரம் மட்டுமே இந்தியாவில் உள்ள அறுசுவை உணவியல் துறையின் ஒரே படைப்பாக்க நகரம் ஆகும்.

## உலக அரிவாள் வடிவ உயிரணுசோகை நோய் விழிப்புணர்வு தினம் 2025 - ஜூன் 19


- இந்தத் தினமானது அரிவாள் வடிவ உயிரணு சோகை நோய் பற்றிய பொது விழிப்பு உணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அரிவாள் வடிவ உயிரணுசோகை நோய் என்பது சிவப்பு இரத்த அணுக்களின் (RBCs) சிதைவை ஏற்படுத்துகின்ற ஒரு மரபு வழி மரபணு மாற்றத்தால் ஏற்படுகின்ற பாதிப்பு ஆகும்.
- சிதைந்த RBC அணுக்கள் இரத்த நாளங்கள் வழியாக வழக்கமான முறையில் செல்ல தேவையான நெகிழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பதில்லை.
- இந்தியாவில் உலகிலேயே இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான அரிவாள் வடிவ உயிரணுசோகை நோய்ப் பாதிப்பு பதிவாகியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Global Action, Local Impact: Empowering Communities for Effective Self-Advocacy" என்பதாகும்.




## இதரச் செய்திகள்

### போபால் நகரில் ரைண்டர்பெஸ்ட் காப்பு மையம்



Certificate

Rinderpest virus

World Organisation for Animal Health
Organisation mondiale de la santé animale
Organización Mundial de Sanidad Animal

Rinderpest virus sequestration and destruction in India

This is to certify the designation of the *Indian Council for Agriculture Research – National Institute for High Security Animal Diseases* (NIHSAD) as a Rinderpest Holding Facility in Category A.

In line with the 2011 declaration by WOAH and FAO of Global Freedom from rinderpest, the provisions of WOAH Resolution no. 21/2017 "Guidelines for Rinderpest Virus Sequestration" and the mandate for Rinderpest Holding Facilities defined by WOAH Resolution no. 27/2023, NIHSAD shall comply with their directives, including the progressive destruction of all non-essential rinderpest virus containing material.

The example set by NIAHSD towards reducing the biological threat from rinderpest virus and safeguarding Global Freedom from rinderpest is recognised by the World Assembly of WOAH Delegates.

Paris, 29th May 2025

Dr Susana Pombo
President

Dr Emmanuelle Soubeyran
Director General

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி

சபையின் தேசிய அளவில் அதிகப் பாதுகாப்பு நடவடிக்கை தேவைப்படும் விலங்கு நோய் ஆய்வு நிறுவனமானது (ICAR-NIHSAD) A வகை ரைண்டர்பெஸ்ட் வைரஸ் காப்பு மையமாக நியமிக்கப்பட்டுள்ளது.

- விலங்கு சுகாதாரத்திற்கான உலக அமைப்பு (WOAH) மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு ஆகியவற்றினால் இது நியமிக்கப்பட்டுள்ளது.
- பாரிசில் நடைபெற்ற WOAH அமைப்பின் 92வது பொது அமர்வின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- ரைண்டர்பெஸ்ட் ஆனது இதற்கு முன்னதாக 'கால்நடைகளின் மீதான பிளேக்' என்று அழைக்கப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டில் உலகளவில் அழிக்கப் படுவதற்கு முன்பு இது ஓர் அழிவுகரமான கால்நடை நோயாக இருந்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★